செ.வெ.எண்: 59/2020 நாள்: 29.01.2020

# திருவண்ணாமலை மாவட்டத்தில் நீர் பாதுகாப்பு / காலநிலை தழுவல் குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் தொடங்கி வைத்தார்…

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (29.01.2020) தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தேசிய நீர் இயக்கம் சார்பாக இந்தோ-ஜெர்மன் கார்பரேசன் (Bilateral Project of GIZ-Indi-German Corporation)இருதரப்பு திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் நீர் பாதுகாப்பு மற்றும் காலநிலை தழுவல் (Water Security And Climate Adaptation - WASCA - TN) குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கினை (District Level Workshop) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் மரு. கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2020 ஆம் ஆண்டிற்கான சுகாதார கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் திருமதி. ஜி. முத்துமீனாள், கண்காணிப்பு பொறியாளர் திரு. ஏ. குத்தாலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா ஜெயசுதா, செயற் பொறியாளர்கள் திரு. தனிகாசலம், திரு. ஏ. ராஜா, நிலத்தடி நீர் துறை கூடுதல் இயக்குநர் திரு. எஸ்.லெனின், ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் நீர் மேலாண்மை இயக்க முன்னாள் கூடுதல் இயக்குநர் திரு. அருணா சுராணா, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மரு. ஆர். ரெங்கலட்சுமி, GIZ நிறுவனத்தின் புதுடெல்லி பிரிவு மரு. ஜெகதீஷ் புரோகித், மரு. வைபவ் சர்மா, தமிழ்நாடு பிரிவு மரு. பி. ராதா பிரியா மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இயக்குநர் அவர்கள் பேசியதாவது ‘நீரினை பாதுகாக்கவும், சேமிக்கவும் தற்போது ஏற்பட்டுள்ள அவசியத்தை வலியுறுத்தி இந்த திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று தொடங்கப்பட்டுள்ளது. தண்ணீர் பற்றாக்குறை வராமல் தடுப்பதற்கு எந்த மாதிரியான நடவடிக்கைகள் நாம் மேற்கொள்ள வேண்டும் என்பது அவசியம். இதற்காக WASCA திட்டம் இந்தோ-ஜெர்மன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் நீர் சேர்க்கைகாகவும் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படம் வறட்சி மற்றும் விவசாயம் தொடர்பாகவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தினமும் நாம் பயன்படுத்தும் முக்கியமான தேவை நீர். இன்று நீர் சேமிப்பு மிக அவசியமானதாக உள்ளது. தற்போது நாம் எப்படி மழை நீரினை சேமிப்பது, அறுவடை செய்வது குறித்த தெரிந்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் 260 வகையான பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இயற்கை வளங்களை பாராமரிக்கவும், மேம்படுத்திடவும் 180 பணிகளும், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை ஆகியவற்றிற்காக 164 பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 18 ஊராட்சி ஒன்றியங்களிலும் நீர் பற்றாக்குறை உள்ளது. இத்திட்டத்தின்படி மாவட்டத்தில் உள்ள 860 கிராம ஊராட்சிகளிலும் பல்வேறு நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள், வேளாண்மை, நீர் வளம், காலநிலை ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. நீர் அதிகமாக சேமிப்பதற்காக குளங்கள், ஏரிகள், தடுப்பணைகள், மரம் நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளபடுகிறது.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு குளங்கள், ஊரணிகள் ரூ.250 கோடி மதிப்பீட்டில் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் பங்களிப்புடன் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் தங்கள் பகுதி நீர் நிலைகளை ஒழுங்காக பராமரிக்க வேண்டியது அவிசயம். இதன்படி தமிழ்நாட்டில் 25000 குளங்கள், ஊரணிகள் புனரமைக்கப்பட்டு, நீர் நிலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு நிலத்தடி நீர் மட்டும் உயர்ந்துள்ளதால் கோடை காலத்தில் தண்ணீர் தேவை போதுமானதாக உள்ளது. தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகள் 2000 தடுப்பணைகள் சீரமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டு, தற்போது வரை 1600 தடுப்பணைகள் முடிக்கப்பட்டுள்ளது. WASCA பிரதிநிதிகளுடன் சேர்ந்து நீங்கள் பணியாற்றினால் கண்டிப்பாக அடுத்த மூன்று ஆண்டுகளில் நிலத்தடி நீர் மட்டத்தின் அளவு மேம்படும்.

அதிகப்படியாக மரங்களை நடுங்கள். நீரின் தரத்தை பகுப்பாய்வு செய்யுங்கள். தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டு பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை விதித்து தற்போது நல்ல முறையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் சுற்றுச்சூழல், நீர் நிலைகள், விலங்குகள், கால்நடைகள் பாதுகாக்கப்பட்டுள்ளது. WASCA மூலம் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்படும், உங்களுடைய வழக்கமான பணிகளில் கூடுதலாக இதிலும் பங்கு கொள்ளுங்கள். இது உங்கள் பகுதி மக்களுக்கு நீங்கள் செய்யும் மிகப் பெரிய சேவை ஆகும். பொதுமக்களுக்கு தேவையான நீரினை வழங்கினால் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். நிலத்தடி நீரினை மாசுபடாமல் பாதுகாக்க வேண்டும். அரசு மூலம் வேளாண்மை, தோட்டக்கலை துறைகளில் சொட்டு நீர் பாசனம் 100மூ மானியத்தில் வழங்குகிறது. இதனை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும், இதன் மூலம் 3-ல் ஒரு பங்கு நீர் சேமிக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நீர்நிலைகள் பாதுகாத்தல், மரக்கன்றுகள் வளர்த்தல் உட்பட பல்வேறு பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான நிதி வழங்குவதற்கு தயாராக உள்ளோம். இத்திட்டம் செயல்படுத்துவதால் கண்டிப்பாக 3-5 ஆண்டுகளில் நீர் நிலைகள் பாதுகாக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயரும். மத்திய, மாநில அரசுகள் மூலம் தமிழ்நாட்டில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக ஜல் ஜீவன் மிசன் (Jal Jeevan Mission) திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இந்திய அரசு தமிழ்நாட்டிற்கு கடந்த ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 22 கோடி மனித வேலை நாட்கள் வழங்கியது, இந்த ஆண்டு 25 கோடி மனித வேலை நாட்கள் வழங்கியுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, பொதுப்பணித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு பயன்பெற வேண்டும்' என்றார்.

இயக்குநர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் 'திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று முதல் நீர் மேலாண்மை திட்டம் துவங்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் செயல்படுத்தப்படவுள்ளது. இதன் முக்கிய நோக்கம் மழை நீர் சேமித்தல், பாதுகாத்தல், நிலத்தடி நீர் மட்டம் உயர்திடவும் பல்வேறு துறைகளுடன் சேர்ந்து செயல்படுத்தப்படுகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகள் உட்பட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து ஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக 250 வகையான பல்வேறு பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. இயற்கை வளம், நீர் மேலாண்மை, தனி நபர் கழிப்பறை, விவசாய நிலம் மேம்பாடு உட்பட பல்வேறு பணிகளுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் நீர் மேலாண்மை, நிலத்தடி நீர் சேமிப்பு ஆகிய பணிகள், குடிமராத்து பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**